# இன்றைய ஈழத்துப் புதுக் கவிகள் பற்றிய

## சில குறிப்புகள்

எம். எச். எம். ஷம்ஸ்

ஒரு பூபாளம் வெளியீடு

1984

# இன்றைய ஈழத்துப் புதுக் கவிகள் பற்றிய சில குறிப்புகள்

– கவிஞர் எம். எச். எம். ஷம்ஸ் –

இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தமது எழுதுகோலின் சமன்பாடான ஆதிக்கத்தைச் செலுத்திவரும் ஒரு சிலருள் ஒருவர் இக்கட்டுரையாளர். கவிதை, சிறுகதை, விமர்சனம், தத்துவம் என்பவற்றோடு, பத்திரிகையாளராகவும் பாடகராகவும் பாரம்பரிய கலைகளின் ஆர்வலராகவும் அமைதியாகக் கலை – இலக்கியப் பணியாற்றி வருகிறார். 'பூபாளம்' முதலாண்டு மலருக்கென அவர் தந்துதவிய இக்கட்டுரை, இன்றைய காலகட்டத்தில் ஒரு கண்ணாடி என்பது நமது துணிபு.

—ஆசிரியர்.

இன்றைய புதுக்கவிதைகளையும், அவற்றைப் படைக்கும் கவிஞர்களையும் ஒருசேரச் சுட்டுவதற்கு வசதியாகவே இப்படி ஒரு தலைப்பிட்டேன்.

புதுக்கவிதைகள் இலக்கியங்களா? அவை வெற்றிபெற முடியுமா? அவற்றின் தோற்றத்துக்கான சமூகவியற் காரணிகள் என்ன? – இப்படியான விஷயங்கள் அவ்வப்போது விமர்சகர்களால் ஆராயப்பட்டிருப்பதால், அதனைவிட்டு, இலங்கையில் புதுக்கவிதைகளின்–புதுக்கவிஞர்களின் தற்போதைய நிலை என்ன என்பதை ஆராய்வதே இக்கட்டுரை வரித்துக்கொண்ட நோக்கமாகும்.

புதுக்கவிதையினைத் தொடாமல், தொடர்ந்து மரபுக்கவிதைகளையே படைத்துக்கொண்டிருப்போர் இன்றுளர். 'மரபு'க் கவிதை வேண்டாம், புளித்துப் போன வடிவம், என்று ஒதுக்கும் புதியவர்களும் உளர். இரண்டு வடிவங்களையும் தேவை நோக்கிப் பயன்படுத்துவோரையும் காண்கிறோம். புதுக்கவிதை வடிவில் வரிகளை அமைத்து மரபுக் கவிதை எழுதும் முருகையன் போன்றோரும் இல்லாமலில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் புதுக்கவிதையெதிர்ப்பு தீவிரமாக இல்லாததால் புதுக் கவிஞர் பட்டியல் அளவுக்கதிகம் நீண்டுள்ளது. இதனை ஆனைக்

கால் வீக்கமென்றே கூறலாம். இங்குப் புதுக்கவிதை நூல்கள் வெளிவருவது குறைவென்ற போதிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் நிறைய இவற்றுக்குக் களமமைத்துக் கொடுக்கின்றன. புதுக்கவிதைச்சென்றே சின்னஞ்சிறு பிரசுரங்கள் அவ்வப்போது வெளிவந்து ஓய்ந்துவிடுவதையும் காண்கிறோம்.

நல்ல புதுக் கவிஞர்களது தோற்றத்துக்கு வழிவகுத்தவை பத்திரிகைகளே. அதேவேளை, தமிழ் எழுதத்தெரிந்த எவரும் புதுக்கவிதை படைத்துவிடலாம் என்ற தவறான கருத்தொன்று பரவுதற்கும் அவையே காரணமாகின்றன. இந்நிலையில் இந்தக் கவிஞர்களின், கவிதைகளின் போக்கினைச் சற்றே அவதானிப்போம்.

முற்போக்குவாதிகள், மனிதாபிமானிகள், சீர்திருத்தவாதிகள், மொழி-இன உணர்ச்சிக் கவிஞர்கள், அழகியல் வாதிகள், ஆத்மீக வாதிகள் என இவர்களுள் பலவகையினர்.

சமூகம் ஏற்றம்பெறவேண்டும், அதன் பயனாக எல்லாவிதக் குறைபாடுகளும் ஒழியவேண்டும், அதற்கான தூண்டுகோலாக இலக்கியம் அமைதல் வேண்டும் என்று விரும்புவோர், சோஷலிஸ யதார்த்தவாதத்தைத் தமது பார்வையாகக் கொண்டவர்கள் எனலாம். சமூக ஏற்றத்தாழ்வு, அடக்குமுறை, இன ஒதுக்கல், தீண்டாமை, பிற்போக்குவாதம் போன்றவற்றை ஒழிக்கும் பாங்கில் இவர்களது கவிதைகள் அமைகின்றன. தமது நாடு தாண்டி மூன்றும் உலகின் அவலங்கள், ஏகாதிபத்தியத்தின் கொடுமைகள் என்பனவும் இவர்களுக்குப் பாடற் பொருளாவதுண்டு.

நுஃமான், சபா ஜெயராசா, பண்ணாமத்துக் கவிராயர், சண்முகம், வ. ஐ செ. ஜெயபாலன், வரதபாக்கியன், யோ.பெனடிக்ட் பாலன், சாருமதி, மருதூர்க்கனி, மு. கனகராஜன், பஸீல் காரியப்பர், ஏ. இக்பால், எம். எச். எம். ஷம்ஸ், எம். எச். எம். அஷ்ரப், திக்குவல்லைக் கமால், சி. சிவசேகர, ம்யேசுராசா, சேரன், ஆதவன், ஊர்வசி போன்ற கவிஞர்கள் தாக்கமான புதுக்கவிதைகள் படைக்கும் முற்போக்காளர்கள். இவர்களுள் முதல் பதின்மரும் மாக்ஸிஸத்தைத் தமது சமூக விமோசனக் கோட்பாடாக ஏற்றவர்கள். இறுதியாகக் குறிப்பிட்ட ஐவரும் தமிழர் விடுதலையைக் கருப்பொருளாகக் கொண்டு தீவிரமான கவிதைகளைப் படைத்து வருகின்றனர். இவர்கள் பாரம்பரிய மாக்ஸிஸத்தை விமர்சன பூர்வமாக அணுகுபவர்கள். ஏனையோர் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படுதல் வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டாலும்

அதற்கு மாக்ஸீயம் மாத்திரம் தான் வழி என்று கொள்ள வில்லை.

இந்தக் கவிஞர்களது படைப் புக்கள் சமூகப்பார்வை கொண்ட போதிலும் அணுகுமுறையிலும், உத்திகளிலும் வேறுபாடுகளை இனம் காணலாம். இதற்குக் கவிஞர் சார்ந்த சித்தாந்தம், இயக்க பூர்வமான ஈடுபாடு, சூழலின் வெவ்வேறுபட்ட தாக்கம், பாரம்பரியம் மொழி(கள்) யாற்றல் என்பவையே காரணம்.

யோ. பெனடிக்ட்பாலன், சாருமதி இருவரினதும் அதிதீவிர இடதுசாரிக் கண்ணோட்டம் அவர்களது படைப்புக்களிலும் நன்கு தெரிகிறது.

ஆலயங்களுண்டு
அடியார்களுண்டு
அறம் சொல்லும்
தாபனங்களும் உண்டு
ஆனால்
வேர்வை சொரிவோர்க்கு
விடிவு இல்லை. —சாருமதி
(குமரன் 15-11-78)

படிமங்களை அழகாகப் பிரயோகிக்கும் சிறந்த படைப்பாளியான சாருமதியின் கவிதைகளில் வர்க்க முரண்பாடுகள்', 'சுரண்டல்', 'பொருளாதாரச் சுவர்கள்' போன்ற பழக்கப்பட்ட மாக்ஸீயச் சொற்கள் பரவி வருவதைக் காணலாம். பிரசார வாடைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இதேபோல் இடதுசாரிக் கொள்கையை ஏற்ற நுஃமான், வரதபாக்கியன், மருதூர்க்கனி ஆகியோரின் கவிதைகள் பிரசாரத் தொனியின்றி கலைத்துவமாகத் திகழ்கின்றன. யாப்புக் கட்டுடன் உணர்ச்சிமயமாகக் கவியெழுதும் வரதபாக்கியன் சில போது இனவெறிச் கவிஞராகவும் மாறிவிடுகிறார். மரபைக் கைவிடாதிருந்த வரதபாக்கியன் (புதுவை இரத்தினதுரை) தற்போது புதுக்கவிதைகளிலும் வெற்றிபெற்று வருகிறார்.

'கவிஞன்' என்ற சஞ்சிகையை எழுபதுகளில் வெளியிட்டவர் நுஃமான். அவரது 'தாத்தாமாரும் பேரர்களும்' நல்ல பல கவிதைகளைக் கொண்ட தொகுப்பு. இயக்க பூர்வமான ஈடுபாடில்லாதபோதிலும் இடதுசாரிச் சித்தாந்த பூர்வமாகப் பிரச்சினைகளை அணுகுபவர் அவர். இவரது ஆரம்பகாலக் கவிதைகளில் உள்ள இறுக்கமும் செட்டும் பிந்திய கவிதைகளில் குறைவு என்பது எனதுகருத்து. 'பாலஸ்தீனக் கவிதைகள்' இதற்கு ஓர் ஆதர்சமாகும். தாம் புதுக்கவிதை எழுதுவதாக அவர் ஒரு போதும் ஒப்புக் கொள்வதில்லை. படிமம், குறியீடு போன்றவற்றை மிகவும் அரிதாகவே பயன்படுத்தும் நுஃமான், பேச்சோசைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்.

பண்ணுமத்துக் கவிராயர் (எஸ், எம். பாரூக்), சபா ஜெயராசா, மு. கனகராஜன் என்

போர் பாரம்பரிய இடதுசாரிக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள். 'இன்ஸான்' (1966-1968) பத்திரிகையின் உதவியாசிரியராக இருந்த பண்ணாமத்துக் கவிராயர் ஆரம்பக்காலத்திலேயே மரபு மீறிய கவிதைகளைப்படைத்தவர். நஸ்றுல் இஸ்லாம், பைஸ் அஹ்மத் பைஸ், நஸீம் ஹிக்மத் போன்ற முற்போக்கு முஸ்லிம் படைப்பாளிகளின் கவிதைகளைத் தமிழில் கொணர்ந்தவர் இவர். ஆங்கிலக் கவிதை மொழிபெயர்பில் வல்லவர்.

இங்குக் குறிப்பிடவேண்டிய ஒருவர் வ. ஐ. செ. ஜெயபாலன் 1970களின் பின்பு கவிதைத்துறையில் பிரவேசித்தாலும் வேகமாக முன்னேறும் முற்போக்குப் படைப்பாளி. தாக்கமான விஷயங்களைப் பிரசார வாடையின்றிக் கலைத்துவமாகக் கவியாக்குவதில் வல்லவர். அண்மையில், அலை(கார்த்திகை 83)யில் எழுதிய 'உயிர்த்தெழுந்த நாட்கள்' என்ற நீண்ட கவிதை ஜூலைக் கடும்புயலின் தாக்கத்தைக் கண்முன்னே காட்சியாக்குகிறது. இவரது கவிதைகளில் உள்ள ஒரு சிறப்பம்சம் 'மண்மணம்'.

பஸீல் காரியப்பர், ஏ. இக்பால், ஷம்ஸ், அஷ்ரப், கமால் ஆகியோருள் முதலிருவரும் புதுக் கவிதை வடிவத்தை நன்கு பயன்படுத்தவில்லை, என்றபோதிலும் மரபு மீறிய சிறந்த கவிதைகளைப் படைத்துள்ளனர். பஸீலின் கவிதைகள் மனதைத் தொடுவன; மனிதாபிமானம் மென்மையாக இழையோடுவதை உணரலாம்; கலைத்துவம் பளிச்சிடும்; எளிமையும் மண்மணமும் கமழ்வன.

ஏ. இக்பாலின் கவிதைகளில் உணர்வுப்பண்பைவிட அறிவுப் பண்பே மேலோங்கி நிற்கும். திக்குவலைக் கமாலின் தொகுப்பான 'எலிக்கூட்டில்' ஆரம்ப காலப் புதுக்கவிதைகளின் பொதுவான குறைபாட்டைக் காணலாம். பிற்காலத்தில் அவர் நல்ல பல கவிதைகளைப் படைத்தார். நல்ல வீச்சும், எளிமையும் கொண்ட அஷ்ரபின் கவிதைகள் மனிதாபிமானத்தை வலியுறுத்துவன. (எனது கவிதைகள்பற்றி இங்கு எதுவும் குறிப்பிடவில்லை).

மேலே காட்டிய முஸ்லிம் கவிஞர்களை 'ஆத்மீகக் கவிஞர்கள்' என்று சில மாக்ஸியவாதிகள் வறட்டுத்தனமாகக் குறிப்பிடுவதுண்டு. 'பத்திரிகை முஸ்லிம் பகுதிகளில் எழுதும் கவிஞர்களை எனக்குப் பிடிக்காது; அவர்கள் வெளியே வரவேண்டும்' என்று ஒரு சிவப்புச் சஞ்சிகையாசிரியர் என்னிடம் கூறியது ஞாபகம்.

மகாகவி அல்லாமா இக்பாலின் பங்களிப்பைக்கூடப் பிற்போக்குத் தனமென்று எடைபோடும் 'சித்தாந்தச் செம்மல்கள்' இங்கும் இல்லாமலில்லை.

'சோஷலிஸ யதார்த்த வாதம்' என்ற இவர்களது அளவுகோல் கள்பற்றி இவர்களுக்கே தெரியாது.

செக்நாட்டு மாக்ஸிய எழுத்தாளரான கலாநிதி கமில் ஸ்வலெபில் ஒருமுறை தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது தோழர் ரகுநாதன் எடுத்த பேட்டி இங்கு நினைவுக்கு வருகிறது.

வினா: 'ஒருவருடைய சிருஷ்டி சோஷலிஸ யதார்த்த வாதத்தின் பாற்பட்டது என்று எப்படி நீங்கள் நிர்ணயிக்கிறீர்கள்?'

விடை: 'எழுத்தாளரின் சிருஷ்டிகள் சகலருக்கும் புரியும் மொழியில் எழுதப்படுதல் வேண்டும். முற்போக்கான கருத்தை அது பிரதிபலித்தல் வேண்டும். அது மாக்ஸீயமாகத்தான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. நாட்டை, மனிதனை மேம்படுத்த உதவுவதானால் சரி. மனிதனை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளில் ஏதாவது ஒன்றைத் தொட்டுத் தீர்வுகாண முயல்வது, வழிகாட்டுவது எழுத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.'

வினா: 'தீர்வுகாண்பது என்றால் மாக்ஸீய முறையில் வழிகாட்டுதல் வேண்டும் என்ற பொருளா?'

விடை: 'இல்லை! சிறந்த முறையில் வழிகாட்டுதல் வேண்டும் என்பதுதான் பொருள். மாக்ஸீய வழியாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. எழுத்தாளன் காட்டும் வழி என்ன என்பதல்ல முக்கியம். அவன் அந்தரங்க சுத்தியோடு அதைச் சொல்கிறுை என்பது தான் முக்கியம். மக்களைத் தீய வழியில் செல்லாமல் தடுத்துச் சிறந்த முறையில் வழிகாட்டுகிறுை இல்லையா என்பதுதான் பிரச்சினை. இதை நான் ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன். தூரிஷ் என்ற கத்தோலிக்க எழுத்தாளரை எடுத்துக்கொள்வோம். அவர் தமது நூல்களில் கத்தோலிக்க மார்க்கத்தின் அடிப்படையில்தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று கூறி வருகிறுர். அவரது வழி தவறுனதாக இருக்கலாம். ஆனுல் அவர் அந்தரங்க சுத்தியோடு மனிதனை மேம்படுத்த வேண்டுமென்று நினைக்கிறுர். அதுதான் முக்கியம்.'

முற்போக்கெண்ணம் கொண்ட முஸ்லிம் கவிஞர்கள் சமயத்தின் பேரில் புரையோடியுள்ள போலித்தனங்களைச் சாடுகின்றனர். சமூக ஏற்றத்தாழ்வின் அவலங்களைத் தமது பாரம்பரியம் சார்ந்து 'மண்மணம்' கமழக் கவியாக்குகின்றனர். இந்த யதார்த்தப் படைப்புக்களைப் படிக்காமலேயே 'ஆன்மிக வாதம்' என்று புறக்கணிக்கும்

சில சிவப்பு விமர்சகர்கள் இதய சுத்தியற்ற போலிப் பிரகடனங்களை முற்போக்கு அறுவடைகளென்று மெச்சுவதுதான் வியப்பாயுள்ளது.

'மெய்யுள்வாதத்தை' முன்வைத்த (காலஞ்சென்ற) மு. தளையசிங்கத்தின் வழிவந்த மு. பொன்னம்பலம் சிறந்த கவிஞர். ஆரம்பக்காலப் புதுக்கவிதையாளரான இவர் 'பூரணி' மூலம் நல்ல கவிதைகளைத் தந்தவர். அடுத்தவர் மு. புஷ்பராஜன். எளிமையும் இறுக்கமும் கொண்டவை இவரது கவிதைகள். தா. இராமலிங்கம் 1960களிலேயே 'புதுமெய்க் கவிதைகள்', 'காணிக்கை' போன்ற புதுக்கவிதை நூல்களைத் தந்தார். இவரது கவிதைகள் தனிரகமானவை. பூரண படிமங்களும், மண்மணமும் கொண்ட இவரது ஆரம்பகாலக் கவிதைகளுள் பல செக்ஸ் வெளிப்பாடுகளே. இவற்றிலும் இறைச்சிக் கருத்துக்களுண்டு என விமர்சகர்கள் கூறுவர். இவர் அண்மையில் எழுதிய கவிதையொன்று மனதைத் தொடுவதாக உள்ளது:

''...அய்யோ வாடிவீடே நீ
வதை கூடம் ஆனுயே......
வளைகுடா யுத்தத்தில்
எண்ணெக் குதங்கள் எல்லாம்
தீப்பற்றி எரிகிறது
பாலஸ்தீனத்தை
இஸ்ரேல் விழுங்கிவிட்டு
மூச்செடுக்க முடியாமல்
முட்டுவைத்து முனகுது...''
(புதுசு-8)

முற்போக்கு முத்திரை குத்திக்கொண்ட சிவப்புப் படைப்பாளிகள் வடக்கில் நடைபெறும் அடக்குமுறை பற்றியோ, அராஜகம் பற்றியோ எழுதுவதில்லை என்ற குற்றச்சாட்டு அடிக்கடி எழுப்பப்படுகிறது. 'அலை','புதுசு' போன்ற இதழ்களே இந்தப் 'புதிய அரசியல் திருப்பங்க'ளுக்குக் களமமைத்துக் கொடுத்து வருகின்றன. சேரன், ஆதவன், ஊர்வசி, கவியரசன் பாலசூரியன், ஹம்ஸத்வனி, சபேசன், சித்தி விநாயகம்பிள்ளை போன்ற கவிஞர்கள் இதே களங்களில் சிறந்த கவிதைகளைப் படைத்து வருகின்றனர்.

மஹாகவியின் மகனை சேரன் தனது 'இரண்டாவது சூரியன்' தொகுப்புமூலம் தமிழின விடுதலைக் குரலை முன்வைத்துள்ளார். எளிமை, இனிமை, கலைத்துவம் கொண்ட கவிதைகள் அவை.

ஒரு காலத்தில் சிறந்த மரபுக் கவிஞராக இருந்த காசி ஆனந்தன் பிற்பட்ட காலத்தில் இன உணர்ச்சி சார்ந்த வசன கவிதைகளை எழுதலானுர். 'தெருப்புலவர் சுவர்க்கவிகள்' என அவரால் வெளியிடப்பட்டவை வெறும் பிரசாரத் துணுக்குகளே.

அ. யேசுராசா ஆரம்ப காலப் புதுக்கவிஞர். சொற்செட்டுக்கு ஆதர்ஷமான அவரது கவிதையொன்றினை நான் சிலாகிப்பதுண்டு.

எனது வாழ்வுக்
காலத்து ஒருநாளில்
சந்திரனில் முதல் மனிதன்
காலடி எடுத்து வைத்தான்
நீண்ட......மிகநீண்ட .....
அண்டவெளிச் சூனியத்தில்
சுற்றுகிற கிரகத்தில்
மனிதத்தடம் பதியத்
தொடங்கியதோர்
முதல்நாளில்
நானும் வாழ்ந்திருந்தேன்.

இக் கவிதையைப் படிக்கும் போது. பெருமித உணர்ச்சி பீறிடுகிறதல்லவா? அலை ஆசிரியரான யேசுராசாவின் நல்லபல கவிதைகள் கணையாழியில் வெளிவந்துள்ளன.

நல்ல விமர்சகரான சி. சிவசேகரத்தின் புதுக் கவிதைகள் இனிமையும் தெளிவும் மிக்கவை. 'மக்களைப் பிரிந்த அறிவாளிகள்' கவிதையின் சாற்றை நாலே நாலு வரிகளில் இப்படித் தருகிறார்:

'மக்களுக்கு அருகிலா
அறிவும் அறிஞர்களும்
தொலைவில் ஒளிர்கின்ற
தாரகைகள் போன்றனவே.
(வானம்பாடி—டிச. 82)

முற்போக்காளர்களாக அவ்வப்போது கவிதை படைத்து வரும் இன்னுமொரு கவிஞர் குழாம் உண்டு.

ஈழவாணன், லோகேந்திரலிங்கம், வில்வரத்தினம், சௌமினி, கோப்பாய்சிவம், அன்பு ஜவஹர்ஷா, ஜவாத் மரைக்கார், அன்புடீன், பாலமுனை பாரூக், சோலைக்கிளி, ஏ. கே. நியாஸ், நஸீர், எச். எம். பாரூக், மு. பஷீர், அனலக்தர், தில்லையடிச்செல்வன் ஆகியோரே அவர்கள்.

நல்ல மரபுக் கவிஞரான ஈழவாணன், லோகேந்திரலிங்கம் மேமன் கவி ஆகியோருடன் இணைந்து வெளியிட்ட 'அக்னி'யை புதுக்கவிதையுலகம் மறந்துவிடாது. தற்போது 'கீற்று' இதழை வெளியிடுகின்ற லோகேந்திரலிங்கம் 'போலிகள்' என்ற புதுக்கவிதைத் தொகுப்பைத் தந்தவர். வில்வரத்தினம் பழைய கவிஞர். தற்போது விடுதலைக் கவிதைகளை எழுதி வருகிறார். ஆரம்ப காலங்களில் எழுதிய புதுக்கவிஞர்களது கவிதைகளையெல்லாம் தொகுத்துப் 'பொறிகள்' என்ற பெயரில் வெளியிட்டவரே அன்பு ஜவஹர்ஷா. 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' என்ற அவரது தொகுப்பில் நல்ல கவிதைகள் பல உண்டு. ஜவாத் மரைக்கார், கவியரங்குகளில் நன்கு பிரகாசிப்பவர். குறியீடு, படிமம் என்பவற்றை அளவோடு அழகாகப் பிரயோகிப்பவர். அன்புடீன் தீவிரமான கருத்துக்களைக் கலைத்துவமாகத் தருபவர். சோலைக்கிளி, ஏ. கே. நியாஸ், ஏ. எம். எம். நஸீர் ஆகியோர் மேகம், குமரன் இதழ்

களில் நல்ல முற்போக்கான கவிதைகளை எழுதியுள்ளனர். பாலமுனை பாருக் ஆரம்பகாலப் புதுக் கவிஞர். தற்போதும் அவரது கவிதைப் பணி தொடர்கிறது. ஈழத்தில் புதுக்கவிதைத் தொகுப்பு வெளியிட்ட முதலாவது பெண்மணியாக சௌமினி விளங்குகிறார். அவரது கனவுப் பூக்களில் நல்ல பல கவிதைகளுண்டு.

இங்குக் குறிப்பிடவேண்டிய ஒருவர் 'வேதாந்தி'-சேகுஇஸ்ஸதீன். இவரது மடைதிறந்த சொல்லாட்சி மனதைக் கவர்கிறது. இவர் நடத்தும் அகவயத் தேடல் சமுதாய ரீதியான பயன்பாட்டைத் தருமா என்பது கேள்விக்குரிய விஷயம்.

இனி, இளம் புதுக்கவிஞர்களது பிரவேசம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. பத்திரிகைகளின் வார வெளியீடுகளைப் பார்த்தால் வாசகர்களைவிடக் கவிஞர்கள் அதிகரித்துவிட்டார்களா என்று கேட்க நினைக்கிறது. என்றாலும் இவர்களுள் ஒரு சிலரைக் குறிப்பிட்டுச் சிலாகிக்கலாம்.

மேமன்கவி, ஏ. ஆர். ஏ. ஹஸீர், வச்ரதுண்டர், கவின் கமல், அல் அஸூமத், டாக்டர் தாஸிம் என்போர் நல்ல கவிதைகளை எழுதுபவர்கள். இவர்களுள் சிலர் வயதில் மூத்தவர்கள். எனினும் புதுக்கவிதைக்குப் புதியவர்கள். 'கலைவாதியும்' தற்போது பிரவேசம் செய்துள்ளார். 'இன்ஸான்' பண்ணையில் தீப்பொறி எழுப்பிய கலைவாதி 'கருவறையில் இருந்து கல்லறைக்கு' என்ற தொகுப்பை மிக அண்மையில் வெளியிட்டார். சமூகப் பிரக்ஞை மிக்க நல்ல கவிதைகள் இதில் உண்டு. அங்கதம் (Satire), நகைச்சுவை, ஆவேசம் கலைவாதியின் படைப்புகளில் சாதாரணமாயுண்டு. அவரது தொகுப்பின் ஆரம்பத்தில் உள்ள குறுங்கவிதைகள் வசனத்தன்மை வாய்ந்தவை. நெடுங்கவிதைகளில் படிமம், குறியீடுகள் நன்கு விழுந்துள்ளன.

மேமன்கவி இரு புதுக்கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்ட அசுரப்படைப்பாளி. புதுமையான குறியீடுகளை அள்ளித் தெளிப்பதில் கவனம் செலுத்தும் இவர் இப்போது பொருத்தம் தவறியும் இவற்றைப் பிரயோகிப்பதுண்டு. ஆரம்பத் தொகுப்பான 'யுகராகங்களில்' முற்போக்கான பல கவிதைகள் உண்டு. பின்னர் வந்த தொகுப்பில் அழகியற் கவிதைகளே அதிகம். எனினும் யாழ். நூலகம் எரியுண்டதுபற்றிய கவிதை மிகச் சிறந்தது. தமிழகப் பெண்கள்பற்றி எழுதியுள்ள கவிதைகள் மனிதாபிமான உணர்வுடன் கூடியவை.

உள்ளத்தைத் தொடுமாறு படிமத்தையும், குறியீட்டையும்

அளவோடு அழகாகப் பிரயோகிப்பதில் வல்லவர் ஏ. ஆர். ஏ ஹஸீர். தெளிவான பார்வை வாய்க்கப் பெற்றால், ஹஸீருக்கு புதுக்கவிதையுலகில் நல்ல எதிர்காலமுண்டு. சூறுவளி பற்றி இவர் எழுதிய கவிதை (சிந்தாமணி) மிகவும் நயக்கத்தக்கது. வக்ரதுண்டர் கலைத்துவம் கொண்ட முற்போக்கான கவிதைகளை 'மேகத்தில்' எழுதி வருகிறார். 'மழையில்லா மேகம்' தந்த கவின்கமலிடமும் நல்ல கவித்துவம் உண்டு. 'கமலம்' இதழைக் கலைக்கமலுடன் தொடர்ந்து வெளியிட்ட இவரது கவிதைகள் சமூகப் பிரக்ஞை வாய்க்கப்பெறவில்லை. அழகியற் பண்புகளே அதிகம்.

தமிழை எளிதாக வாலாயமாக்கிக் கொண்ட சிறந்த மரபுக் கவிஞரே அல்அஸூமத். பலவித யாப்புக்களிலும் பரிசோதனை செய்ததோடு பல்லவர்காலச் சித்து விளையாட்டுக்களிலும் தனக்கு ஆற்றலுண்டு என நிரூபித்தவர். அவர் முதலில் எழுதிய கருங்காலி—நெடும் புதுக்கவிதை (பூபாளம்) வாசகர் திணறும் அளவுக்குப் படிமம், குறியீட்டு உத்திகளைக் கொண்டது.

'வெள்ளையிலோர் புள்ளியைத்' தந்த தாஸிம் அஹமதுவின் கவிதைகளில் புதுக்கவிதை லட்சணங்கள் குறைவு. எனினும் எளிமையும், இனிமையும் கொஞ்ச, மெல்லிய உணர்வுகளை வெளிப்படுத்துபவர். நல்ல சொற்செட்டும் எளிமையான குறியீட்டு உத்தியும் வாய்க்கப்பெற்ற ஓட்டமாவடி அஷ்ரப்பின் நீண்ட கவிதைகள் நயமிக்கவை.

இனி, இள மொட்டுக்களாகக் கவிமணம் பரப்பக் காத்திருக்கும் மிகப் புதியவர்கள் பக்கமும் கவனம் செலுத்துவோம். அவர்களுள் இரண்டொருவரேனும் எதிர்காலத்திலே பிரகாசிக்க வாய்ப்பிருக்காதா என்ன?

அந்த நீண்ட பட்டியலின் ஒரு பகுதியைத் தர எண்ணம்.

கலைக்கமல்' ஈழகணேஷ், செந்தீரன், கலாவிஸ்வநாதன், ஸுல்பிகா ஷரீப், எம்.ஏ. நஹீமா, நீள்கரைநம்பி, ஏ. எல், நளீபா, பாத்திமா மைந்தன், ஜீவகன், அஸீஸ் நிஸாருதீன், எஸ். ஐ, நாகூர்கனி, இப்னு அஸூமத், நஜ்முல் ஹுஸைன். கலையன்பன் ரபீக், ஆர். எம். நவ்ஷாத், தம்பிலுவில் ஜெகா, ராம்ஜீ. மருதூர் அலிகான், ருஹில் தவ்பீக், ஸில்மியா ஹாதி. செல்வி இந்து, அன்பிதயன் ஸிராஜ், பொன் தமிழ் நேசன், சுபைர்கான், இக்பால் கான். மஸ்கெலியா மனோகரன். திக்குவல்லை ஸஃப்வான், எஸ். ஐ. எம். ஹம்ஸா, (நாளாந்தம் இந்தப் பட்டியல் நீண்டு செல்வதால் எவரது பெயரும் திட்டமிட்டுக்கப்படவில்லை).

'ஓடக்குழல்' தந்த கலைக் கமல் சமூகப் பிரக்ஞையுடன் எழு தினுல் எதிர்காலமுண்டு. காதல் ஓலம், சீதனம், மனித பலவீனங் கள், ஊழல்கள் சில அறிவுரைகள் இவைதாம் பலரது கவிதைப் பொருளாகின்றன. படிமத்துக் காகக் குறியீட்டுக்காகக் கவிதை யெழுதும் குறுக்குவழியை நமது புதியவர்கள் கைவிடுதல் வேண் டும். உள்ளத்து உணர்ச்சிகளின் உயிர்பெற்ற வடிவமாகக் கவிதை கள் வெளிப்படுதல் வேண்டும். இதற்குச் சமூக தரிசனமும் இதய சுத்தியும் தேவை. போலித்தனம் களைந்து யதார்த்தம் கவிதை யைத் தழுவுதல் வேண்டும். இந் தப் புதியவர்களது கவிதைகள் விமர்சனத்துக்கெடுத்துக் கொள் ளப்படவில்லை. காரணம், அவர் கள் நிறையப் படைக்க இருக்கி ருர்கள்.

